மன்னர் சரபோஜி அரசு கல்லூரியில்

# உள் விளையாட்டரங்கம் அமைத்த முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் தஞ்சை தொகுதி உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம் பேச்சு!



சென்னை, மார்ச் 29-

சட்டப்பேரவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில் தஞ்சை தொகுதி உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம் பேசுகையில் மன்னர் சரபோஜி அரசு கல்லூரியில் உள் விளையாட்டரங்கம் அமைத்த முதல்வருக்கும், துணை முதல்வருக்கும் நன்றி தெரிவித்து பேசினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியத்தில் தஞ்சை டி.கே.ஜி. நீலமேகம் பேசினார்.

“வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்

கோனோக்கி வாழுங் குடி”

என்ற குறளுக்கேற்ப ஆட்சி நடத்துகின்ற நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“வம்பன் எவனையும் வணங்கி நான் பணிந்ததில்லை

எந்த கொம்பனுக்கும் அஞ்சி என்கை குவிந்ததில்லை

சிம்புற்று பறவையே, உன் சிறகுகளை வணங்குகிறேன்”

என்கிற வைர வரிகளுக்கேற்ப, தமிழகம் எங்கும் சுற்றி ஆட்சிப் பணியையும், கழகப் பணியையும் செய்து சிறப்பித்து வருகின்ற முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், தொழில் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன். நீதி வழுவா ஜனநாயக மாண்பு காக்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், அவையோர் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறை என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட சிறப்புக்குரிய துறையாகும். எங்கள் இளைய கலைஞர் துணை முதல்வர் அவர்களால் இன்றைக்கு இந்தத் துறை பார்போற்றும் துறையாக உயர்ந்து நிற்கிறது. அதேபோன்று, மகளிர் சுய உதவிக் குழு என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டதாகும். தற்போது, அது ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி படர்ந்திருக்கிறது; கடந்த ஆண்டுமாத்திரம் 24 ஆயிரத்து 712 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு, இந்த ஆண்டு 30 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இந்த அரசு செய்திருக்கின்ற அடிப்படைப் பணிகளுக்கு சிறப்பு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உலக விளையாட்டு அரங்கில் தமிழ்நாட்டினுடைய பெருமை பேசப்படுகிறது என்றால், அதற்குக் காரணமாக 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகளைச் சொல்லலாம். இந்திய வரலாற்றில் முதன்முறையாக தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட அந்தப் போட்டியில் 150 நாடுகளைச் சேர்ந்த 2,000 முன்னணி வீரர்கள் கலந்துகொண்டு பெருமை சேர்த்தார்கள்.

### கிராமப் பஞ்சாயத்துக்கு 0.86 ஆயிரம் கோடி!

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 86 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அது, கிராமப்புற மக்களிடையே மிகுந்த பரபரப்பையும், எழுச்சியையும் உருவாக்கியிருக்கிறது. சிறப்புக்குரிய அந்தத் திட்டத்தை தற்போது நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தி, நடைமுறைப் படுத்துவது என்பது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

‘முதல்வர் கோப்பை’ விளையாட்டுப் போட்டிகள் மிகச் சிறப்பாகத் தொடங்கப்பட்டு, பரிசுத் தொகை உயர்த்தப்பட்டு, கடந்த ஆண்டு போட்டிகளில் பங்கு பெற்றவர்கள் 6 இலட்சத்து 71 ஆயிரம் பேர் என்றிருந்த நிலை உயர்ந்து இந்த ஆண்டு 11 இலட்சத்து 56 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றிருக்கின்றார்கள் என்றால், அதுதான் இந்த இயக்கத்திற்கும், இந்த அரசுக்கும் கிடைத்திருக்கிற மிகப்பெரிய பெருமையாகும்.

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளில் தமிழ்நாடு விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குகின்ற திட்டத்தின்கீழ், கடந்து ஆட்சிக் காலத்தில் 3 நபர்களுக்கு, அதுவும் பொதுத் துறையில் மட்டுமே வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆனால், திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் 93 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு பல்வேறு அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது முதல்வர் அவர்களுடைய சிறப்புக்குரிய பணியாகும் என்பதை இந்த அவையில் நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

எங்களுடைய தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த *pole vault* வீராங்கனை ரோஸி மீனா அவர்கள் பல்வேறு மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வென்றவர். கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 7 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்று, நம்முடைய தமிழ்நாட்டிற்கு பெருமைச் சேர்த்திருக்கின்றார். இந்த இடத்திலேயே இந்த அவையிலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வீராங்கனை ரோஸி மீனா அவர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் அரசுப் பணி கிடைத்துள்ளது என்பதுதான் இந்தத் திராவிட மாடல் அரசுக்கு கிடைத்த வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், தஞ்சையைச் சேர்ந்த நந்தகுமார் அவர்கள், *Khelo India Youth Games, Junior National Championship* போட்டிகளில் கலந்து கொண்டு, தமிழ்நாடு அணிக்காக விளையாடியவர். *Junior Men South Zone Championship* தமிழ்நாடு தங்கப் பதக்கம் வெல்ல முக்கியமான காரணமாக இருந்தவர் என்றால், அந்த உந்து சக்தியை உருவாக்கியவர் துணை முதல்வர் அவர்கள் என்பதனை யாரும் மறுக்க முடியாது.

ஒன்றிய அரசின் மாற்றான் தாய் மனப்போக்கு காரணமாக, கல்வித் துறை உள்ளிட்ட பல துறைகளுக்கு வழங்க வேண்டிய நிதியினை வழங்காமல் இருப்பதுபோல், இப்போது புரட்டிப் பார்த்தால், விளையாட்டுத் துறையிலும் *Khelo India* திட்டத்திலும் மாற்றான் தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், BJP ஆளுகின்ற மாநிலமான உத்திர பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 438 கோடி ரூபாயும், குஜராத் மாநிலத்திற்கு 426 கோடி ரூபாயும், ராஜஸ்தான் மாநிலத்திற்கு 107 கோடி ரூபாயும் வழங்கியுள்ளார்கள். ஆனால் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வெறும் 20 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியுள்ளது என்பதுதான் உண்மை. இதில் மிகப் பெரிய வேடிக்கை என்னவென்றால், ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வான வீரர்களில் 438 கோடி ரூபாய் பெற்ற உத்திர பிரதேசத்தில் 7 வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 426 கோடி ரூபாய் பெற்ற குஜராத்தில் 2 வீரர்கள் மட்டுமே சென்றிருக்கிறார்கள். 107 கோடி ரூபாய் பெற்ற இராஜஸ்தானிலிருந்து 2 வீரர்கள் மட்டுமே அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் 7 ஆண்டுகளில் 20 கோடி ரூபாயை மட்டும் பெற்ற தமிழ்நாட்டிலிருந்து 13 வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால், அதுதான் திராவிட மாடல் அரசினுடைய சிறப்பு என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

போற்றுதலுக்குரிய திட்டமான தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் பணி 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, விளையாட்டு வீரர்களுக்கு இது நாள்வரையில் 12 கோடியே 9 இலட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டு, 640 வீரர்கள் பயன்பெற்று, 113க்கும் மேற்பட்ட பதக்கங்கள் வென்றிருக்கின்றார்கள். இது இந்திய விளையாட்டுத் துறையில் இதுவரை செய்திடாத மிகப் பெரிய முயற்சியாகப் பாராட்டப்படுகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டின் நிலையை உயர்த்தி பதக்கங்களை வெல்லுகின்ற வகையில் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லுகின்ற விளையட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகையாக கடந்த ஆட்சிக் காலத்தைவிட 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையில் 4,555 விளையட்டு வீரர்களுக்கு ரூ.151.41 கோடி ஊக்கத் தொகை இந்த ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும் விளையாட்டு வீரர்கள் இன்றைக்கு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் மேலாக, தேசிய அளவில் வெற்றிப் பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு இதுவரை ஊக்கத் தொகை வழங்கப்படவில்லை. ஆனால், 24.8.2023 அன்று கருணையுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்ற அரசாணையின் காரணமாக மாற்றுத் திறனாளிகளுக்கும் இந்த ஊக்கத் தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதுதான் திராவிட மாடல் அரசினுடைய சிறப்பு என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை (Elite) தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்றாலும் கூட திராவிட மாடல் ஆட்சியில் ஒருவருக்கு அந்தத் தொகையை ரூ.30 இலட்சம் வீதம் உயர்த்தியும், 27 நபர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கக்கூடிய ஊக்கத் தொகை இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இடத்திலே நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களையும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, இதில் பயன்படுகின்றவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கி தந்தால், இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல சர்வதேச அளவிலே போட்டிகளில் பதக்கங்கள் வெல்கின்றவர்களை ஊக்கப்படுத்துகின்ற திட்டமான அந்தத் திட்டம் இன்றைக்கு விரிவு படுத்தப்பட்டு, ரூ.12 கோடி ஒதுக்கப்பட்டு, 75 வீரர்கள் பயனடைந்து வருகின்றார்கள். இதற்காக அரசு ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த இடத்திலே நான் மீண்டும் அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவது இத்திட்டத்தினுடைய பயனை, விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் MIMS திட்டத்தில் 2023-2024 ஆம் ஆண்டு இது விரிவுபடுத்தப்பட்டு, இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து, நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தியதுடன், 100 விளையாட்டு வீரர்கள் இத்திட்டத்திலே பலனடைந்து வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இதற்காக அரசு நான்கு கோடி ரூபாய் ஒதுக்கி வருகிறது. இத்திட்டத்தையும் விரிவுபடுத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே நான் ஒன்றை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகின்றேன். நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு விளையாட்டு வீரர்களை பல சந்தர்ப்பங்களில் தமிழ்நாட்டில் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்பதையும், சில உதாரணங்கள் ஒன்றிரண்டை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியைச் சேர்ந்த மனோஜ் என்கின்ற மாற்றுத் திறனாளி. இவர் ஒரு குள்ள மனிதர். *Para Athletics* விளையாட்டுப் போட்டிகளில் *Javelin throw, Discus throw, Shot put* ஆகிய விளையாட்டுகளில் பங்கு பெறுகின்றவர். 2023ல் ஜெர்மனியில் நடைபெற்ற குள்ள மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக இவரோடு சேர்ந்து, ஆறு பேர் ஜெர்மன் சென்றார்கள். அதற்கான அனைத்துச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டு துணை முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்த காரணத்தினால் இன்றைக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என அனைத்து பரிசுகளையும் பெற்று வந்திருக்கின்றார்கள். இதிலே இன்னும்கூட நம்முடைய அரசைப் பாராட்ட, முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும் இந்த நாடு பாராட்டிக் கொண்டிருப்பதை உற்றுப் பார்க்க வேண்டும். இதில் குறிப்பிட்ட மனோஜ் அவர்களுக்கு, அவர் ஒரு குள்ள மனிதர். சென்று பல வெற்றிகளைப் பெற்று வந்தார். அந்த குள்ள மனிதருக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே, இன்றைக்கு TNPL நிறுவனத்தில் 2024ஆம் ஆண்டு பணி நியமனம் செய்யப்பட்டு, அந்த குள்ள மனிதர் பணி கிடைத்ததினால், பல்வேறு சிறப்புகளை இந்த ஆட்சியால் பெற்றதனால், துணை முதல்வர் அவர்களின் கருணைபட்டதினால் திருமணம் ஆகியிருக்கிறது. அது மாத்திரமல்ல; பல்வேறு நிலைகளில் தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியோடு இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதேபோல கோவையைச் சேர்ந்த செல்வி தன்யதா அவர்களுக்கு 17 இலட்சம் ரூபாய் செலவில், அதை வாங்க முடியாத சூழலில் இருக்கின்ற அந்த மாணவி, விளையாட்டு வீராங்கனைக்கு 17 இலட்சம் ரூபாய் செலவிலான சர்வதேச தரம் வாய்ந்த *Track cycle* வழங்கிய காரணத்தினால், மலேசியாவில் நடைபெற்ற ஆசிய அளவிலான *Track cycling* போட்டியிலே கலந்துகொண்டு அவர் வெள்ளிப்பதக்கம் பெற்றார். அதேபோல, *AsiaPacific* அளவிலான *Athletics* போட்டிகளிலே கலந்துகொள்ளச் சென்ற காதுகேளாத மாற்றுத் திறனாளிகள் 14 பேருக்கு, சென்று வருவதற்கு துணை முதல்வர் அவர்களால் ஊக்கம் வழங்கப்பட்ட காரணத்தினால் நான்கு தங்கப் பதக்கங்களையும், ஆறு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்தார்கள். இதற்கெல்லாம் முழுக்காரணம் நம்முடைய முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பல்வேறு சிறப்புகளை விளையாட்டுத் துறைகளில் செய்து வருகின்ற துணை முதல்வர் அவர்கள், விளையாட்டு வீரர்கள் சார்பிலே சில கோரிக்கைகளை வைக்க விரும்புகின்றேன். தேசிய, சர்வதேச அளவிலே விளையாட்டு வீரர்கள் விளையாடுகின்றபோது, போட்டியிலே பங்கேற்கின்றபோது ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு காப்பீட்டுத் தொகை அரசே கொண்டு வந்து, அவர்களுக்கு உதவும்படி, இன்றைக்கு விளையாட்டு வீரர்களிடத்திலே ஒரு கோரிக்கை இருக்கின்றது என்பதை நம்முடைய அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து மற்றும் தஞ்சை அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தில் சர்வதேச அளவிலே ஓடுதளப்பாதை பணி நடைபெற்று வருகிறது. அந்தப் பணி முழுமையாக முடிவதற்கு துணை முதல்வர் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மாற்றுத் திறனாளி விளையாட்டு வீர்கள் பங்கேற்கின்ற வகையிலே, அவர்களை ஊக்கப் படுத்துகின்ற வகையில் *Para* விளையாட்டு மைதானம் தஞ்சையிலே அமைத்துத் தரும்படி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடத்திலே தருகின்றேன். அவற்றையெல்லாம் பதிவு செய்துகொண்டு, நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னர் சரபோஜி அரசு கல்லூரியிலே ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலே உள் விளையாட்டரங்கம் அமைப்பதற்கு உதவி செய்த முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல பிள்ளையார்பட்டியிலே நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பயன்பெறுகின்ற வகையிலே 31 கோடி ரூபாய் மதிப்பிலே TIDEL Park அமைக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நம்முடைய எதிர்க்கட்சி துணைக் கொறடா அவர்கள் பேசுகின்றபோது ஒரு பாடலை பாடினார்கள்.

பல்வேறு பாடல்களை இங்கே நம்முடைய எதிர்க் கட்சி துணைக் கொறடா அவர்கள் பாடினார்கள். இவைகளுக்கெல்லாம் மேலாக எங்களுடைய தலைவர், எங்களுடைய இனத்தினுடைய தலைவர், தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே சினிமாவில் நடித்து, அதில் அவர் பாடிய ஒரு பாடலை இந்த நேரத்திலே இந்த அவையிலே முன்வைக்க விரும்பு கின்றேன்.

**ஆற அமர கொஞ்சம் யோசிச்சு பாரு நீ**

**அடுத்து வரும் தலைமுறையை சிந்திச்சு பாரு**

**(மேசையைத் தட்டும் ஒலிசு)**

**ஆற அமர கொஞ்சம் யோசிச்சு பாரு நீ**

**அடுத்து வரும் தலைமுறையை சிந்திச்சு பாரு**

**ஏற எறங்க பாத்து எடைகளை கொஞ்சம் போடு நீ**

**எத்தனுக்கும் பித்தனுக்கும் தடைகளை போடு**

**(மேசையைத் தட்டும் ஒலி)**

என்று பாடியவர் எங்களுடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை உணர்ந்த காரணத்தினாலேதான் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் அவரை இந்த ஆசனத்திலே அமர வைத்திருக்கிறார்கள். அதை உணர்ந்து இன்றைக்கு அவர் போடுகின்ற நடையென்பது, தமிழ்நாட்டு மக்களிடத்திலே மிகப் பெரிய சிறப்பை பெற்றிருக்கிறது என்று கூறி அருமையான வாய்ப்புக்கு நன்றி கூறி, தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

### தொகுதிக் கோரிக்கைகள்:

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை தொடங்க வேண்டும்.

தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் பேரூராட்சிப் பகுதியில் நவீன அரிசி ஆலை (MRM) அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை பெரிய கோயிலில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சரிசெய்யும் வகையில் மாற்றுப் பாதை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சித்த மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர்பட்டுக்கோட்டைக்கு புதிய இரயில் தடம் அமைத்துத் தர பரிந்துரை செய்ய வேண்டும்.

CEO, DEO, BO அலுவலகக் கட்டடங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறை வளாகத்தினை அமைத்துத் தர வேண்டும்.

பூக்காரத் தெரு பூச்சந்தை பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய (குளிரூட்டப்பட்ட) பூச்சந்தை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் நாஞ்சிக் கோட்டை ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் ஹாக்கிடப் கோர்ட் மைதானம் (*Hockey Turff Court*), கபடி விளையாட்டிற்கென அரை உள்விளையாட்டு அரங்கம் (*Semi Indoor Stadium*), கபடிக்கான கபடி அகாடமி, 50 மீட்டர் நீளமுள்ள நீச்சல் குளம் (*Swimming Pool With Diving Pool*), 25 மீட்டர் நீளமுள்ள துப்பாக்கி சுடுதள அரங்கம் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை நகரப் பகுதியில் அறிவுசார் மையம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் பெரியகோயில் மற்றும் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலில் தமிழ்நாடு அரசு சார்பில் இலவச பக்தர்கள் தங்கும் விடுதியினை கட்டித் தர வேண்டும்.

தஞ்சை ராஜ வீதிகளான கீழராஜ வீதி, தெற்கு வீதி, மேல வீதி, வடக்கு வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் கரந்தை கால்நடை கிளை நிலையத்தினை மருந்தகமாக தரமுயர்த்தித் தர வேண்டும்.

தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை பிருந்தாவனம் முதல் கரந்தை, கடகடப்பை வழியாக செல்லும் வடவாற்றின் இருபுறமும் பக்கவாட்டுச் சுவர்கள் அமைத்தும், படிக்கட்டுகளை சீர் செய்தும் தர வேண்டும்.

வடவாற்றிலிருந்து பிரியும் ஐவேலி வாய்க்காலைத் தூர்வாரி பக்கவாட்டு சுவர் எழுப்பி சீர் செய்து தர வேண்டும்.

தஞ்சாவூர் பனகல் கட்டடத்தினை பழமை மாறாமல் சீர்செய்து புதுப்பித்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் பழைய மேம்பாலம் (ராணி தியேட்டர்) அருகில் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர், நீலகிரி ஊராட்சிக்குட்பட்ட மனோஜிப்பட்டி பகுதியில் கிளை கால்நடை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் மாநகராட்சி கோடியம்மன் கோயில் அருகில் வாழைப்பூ வாய்க்கால் கரையில் உள்ள தார்ச்சாலையை அகலப்படுத்தி, புதிய தார்சாலை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் மாரியம்மன் கோயில் ஊராட்சி பகுதியில் புற காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர், கருத்தட்டான்குடி மற்றும் மகர் நோன்புச்சாவடிக்கு புதிய சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

தஞ்சாவூர் மாநகராட்சி, வார்டு40, கிட்டு மைதானத்தினை கால்பந்து மற்றும் கிரிக்கெட் மைதானமாக தரமுயர்த்தித் தர வேண்டும்

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட மேல திருவையாறு ரோடு (பழைய திருவையாறு சாலை), வெண்ணாற்றங்கரை முதல் வடக்கு வீதி வரையுள்ள சாலையை அகலப்படுத்தி புதிய தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் தொகுதி, வல்லம் தேர்வுநிலை பேரூராட்சியில் வளம் மீட்பு பூங்காவில் சமுதாயப் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் தொகுதி வல்லம் பேரூராட்சி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 8 இஞ்ச் DI குழாய்கள் அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் கூட்டம் வாணக்கன்காட்டில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், ஒன்றிய செயலாளரும் மாவட்ட அறங்காவல் குழு தலைவருமான தவ.பாஞ்சாலன் வரவேற்பிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, கழக இளம் பேச்சாளர் தமிழினியன், எஸ்.எஸ்.கருப்பையா, ஆர்.ஆர்.சாமிநாதன், சூசைராஜ், ஜி.அரங்கநாயகம், மீனம்பட்டி வெங்கடேசன், கோ.மதியழகன், ஆர்.ராஜாங்கம், எம்.தனவேந்தன், கோ.பன்னீர், தியாக.இளஞ்செழியன், டாக்டர் தவ.பா.உதயசூரியன், எம்.குழந்தையா, ஆர்.சந்திரசேகரன், சி.சந்திரசேகர், பிகணேசன், ஆர்.முத்தன், ஜி.சத்யா, ஆர்.சரவணன், டி.முருகேசன், ஆர்,செந்தாமரை, க.பழனிதுரை,மெடிக்கல் ரமேஷ், லெட்சுமணன், நடராஜன், நித்யா முருகேசன், மணிகிளாஸ், பூ.முருகேசன், மயில்வாகணன், என்.எம்.அய்யப்பன், ராஜாராம் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.